## திருச்சி சிவா போன்ற லட்சியவாதிகள் இருக்கும் வரை

# தி.மு.கழகத்தை யாராலும் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது!

## சென்னையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உற்சாக உரை!

**சென்னை, அக் 7-**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில் திருச்சி சிவா எம்.பி அவர்களின் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வரவேற்புரை ஆற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர், கழக மாநிலங்களவைக் குழுத் தலைவர் அண்ணன் திருச்சி சிவா அவர்களின் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழாவில் பங்கேற்று வரவேற்புரை ஆற்றுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணியை உருவாக்கியபோது, அவருடன் தோளோடு தோள் நின்ற தளபதிகளில் முதன்மையானவர்தான் அண்ணன் திருச்சி சிவா அவர்கள். இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில், இளைஞர் அணியின் இன்றைய செயலாளர் என்ற வகையில், பங்கேற்று, உங்களையெல்லாம் வரவேற்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற வகையில், மட்டுமல்லாமல், இங்கு நானும் ஒரு பதிப்பாளராகப் பெருமையுடன் நின்றுகொண்டு இருக்கிறேன்.

**ஐந்து புத்தகங்கள்!**

இளைஞர் அணியின் சார்பாக முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி, பல்வேறு நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். அண்ணன் சிவா அவர்களின் `மேடை எனும் வசீகரம்' எனும் புத்தகம், அவரின் மிசா சிறை அனுபவம் பற்றி `எதிர்பாராத திருப்பம்' என்ற புத்தகம், முரசொலியில் வெளிவந்த அவர் கட்டுரைகளின் தொகுப்பாக 'முரசொலியின் மடியில் தவழ்ந்தவை' என்னும் புத்தகம், ஊடகங்களுக்கு அண்ணன் அவர்கள் அளித்த பேட்டிகளைக் கொண்ட 'கேளுங்கள் சொல்கிறேன்' என்ற புத்தகம், வாட்ஸ்அப் வழியில் கொண்டு சேர்க்கப்பட்ட கருத்துகள் அடங்கிய `குட் மார்னிங் காட்சியும் கருத்தும்' என்ற புத்தகம் என இந்த ஐந்து புத்தகங்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

அண்ணன் சிவா அவர்களுக்குப் பேச்சாளர், எழுத்தாளர், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் இப்படிப் பல முகங்கள் இருக்கின்றன. ஆனால், இளைஞர் அணியைப் பொறுத்தவரை எங்களுக்கெல்லாம் அவர் ஒரு ஆசிரியர். ஏனென்றால், இளைஞர் அணி தம்பிமார்களுக்கு, நம் திராவிட இயக்கக் கொள்கைகளை ஒரு ஆசிரியர் போல பாடம் எடுப்பவர் தான், அண்ணன் திருச்சி சிவா அவர்கள்.

**பாசறைக் கூட்டம்!**

இளைஞர் அணி சார்பாக பயிற்சி பாசறைக் கூட்டங்களை நடத்துவோம். அந்தக் கூட்டங்களுக்கு வரும்போது கையோடு ஒரு போர்டு, சாக்பீஸ், போர்டு வைப்பதற்கு ஸ்டாண்ட் இதோடு தான் பயிற்சிப் பாசறைக் கூட்டத்திற்கே வருவார். கையில் ஒரு குச்சி மட்டும்தான் இல்லை.

அந்த அளவிற்கு ஒரு ஸ்ட்ரிக்ட்டான ஆபீசர் என்றால், எங்களின் அண்ணன் திருச்சி சிவா அவர்கள்தான் என்று நான் பெருமையாகச் சொல்வேன். எங்களின் இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டங்களில் அதிகமாகப் பேசியது யார் என்றால், அண்ணன் திருச்சி சிவா அவர்கள் மட்டும்தான்.

ஒவ்வொரு கூட்டத்திலும் கலைஞர் அவர்கள் தந்த ஐம்பெரும் முழக்கங்களை அண்ணன் சொல்லச் சொல்ல அந்த ஒட்டுமொத்த அரங்கமும் திருப்பிச் சொல்லும். அதைப் பார்க்கும் போது அந்த அரங்கம் உணர்ச்சிப்பூர்வமாக இருக்கும். கழக மேடைகளில் மட்டுமல்ல நாடாளுமன்றத்திலும் தன் முத்திரைகளை அழுத்தமாக பதித்து வருபவர் அண்ணன் சிவா அவர்கள்.

**தனிநபர் தீர்மானம்!**

மாநிலங்களவையில் 45 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு தனிநபர் தீர்மானம் வெற்றிப் பெற்றது என்றால், அதற்கு காரணம் அண்ணன் திருச்சி அவர்கள் தான். இங்கு ஏற்கனவே, குறிப்பிட்டதைப் போல திருநங்கைகளுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்தவர்தான் அண்ணன் திருச்சி சிவா அவர்கள்.

2017ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுப் போராட்டம் உச்சத்தில் இருந்தபோது மாநிலங்களவையில்



அண்ணன் சிவா அவர்கள் கொண்டு வந்த தீர்மானம்தான் இப்போது ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கு காரணம் என்று சொல்லலாம்.

1977ஆம் ஆண்டு நான் பிறந்தபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மத்திய சிறையில் இருந்தார்கள். அப்போது நம் தலைவர் அவர்களுக்கு கலைஞர் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில், `நான் சிறையில் இருந்தபோது நீ குழந்தையாக என்னைப் பார்க்க வந்தாய், இப்போது உனக்குப் பிறந்திருக்கின்ற என் பேரனும் என்னைப் பார்க்க சிறைக்கு வருவான் என்று கருதுகிறேன்' என்று கலைஞர் எழுதினார்.

மேலும், இந்தக் குடும்பத்தில் மட்டுமல்ல, நமது இயக்கமாம் பெரிய குடும்பத்தில் எத்தனையோ உடன்பிறப்புகளுக்கு இப்படிப்பட்ட சிறை அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன என்று கலைஞர் அவர்கள் எழுதி இருந்தார்கள். கலைஞர் சொன்ன அந்த எத்தனையோ குடும்பங்களில் முதன்மையான குடும்பம் என்றால், அண்ணன் சிவா அவர்களின் குடும்பமும் ஒன்று.

**நம் இயக்கம், நம் தியாகம்!**

அண்ணனின் பொதுவாழ்வில் அவர் பலமுறை சிறை சென்று இருக்கிறார். அவரின் குடும்பமும் இயக்கப் பணிகளுக்கான பல்வேறு கடுமையான சூழ்நிலையை எல்லாம் எதிர்கொண்டு இருக்கிறது. இதனை தன் நூல்களிலும் அண்ணன் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதுதான் நம் இயக்கம். மக்களுக்கான பணியில் இதுதான் நம் தியாகம்.

அண்ணன் திருச்சி சிவா அவர்களுக்கு ஒன்றேயொன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உங்களின் மூன்று குழந்தைகளும் பிறக்கும் நேரத்தில், நீங்கள் அருகில் இல்லை என்று புத்தகத்தில் வருத்தப்பட்டு எழுதி இருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு உங்களின் ஐந்து குழந்தைகள் பிறக்கும்போது, இந்த அரங்கத்தில் ஒட்டுமொத்த தமிழ்நாடே திரண்டு இருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் உங்களுடன் இருக்கிறார். நாங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கிறோம். திராவிட இயக்கத்தை வீழ்த்திவிடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அண்ணன் திருச்சி சிவா போன்ற லட்சியவாதிகள் இருக்கின்றவரை, இந்த இயக்கத்தை யாராலும் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது.

**வருக வருக!**

இந்தச் சிறப்புக்குரிய புத்தகங்களை வெளியிடுவதற்காக வருகை தந்துள்ள இந்திய அரசின் ஒப்பற்றத் தலைவர் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். கழகப் பொருளாளர், அமைப்புச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

கலைஞரின் அன்பு தம்பி, தலைவர் அவர்களின் நேசத்திற்குரியவர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். பாசிஸ்ட்டுகளை ஹேஸ்டேக் ஜட்ஸ் ஆஸ்கிங் என்று போகிறப் போக்கில் தன் கேள்விகளால் கதறவிட்டுக் கொண்டிருக்கின்ற நடிகர் பிரகாஷ் ராஜ் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தன் வாழ்நாள் முழுவதும் திராவிடத் தத்துவத்தை பரப்புகின்ற வாய்ப்பாகக் கருதி பணியாற்றுகின்ற திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் அண்ணன் சுப.வீரபாண்டியன் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கும் நெல்லை ஜெயந்தா அவர்களையும் வரவேற்று மகிழ்கிறேன்.

**தோழமைக் கட்சிகளின் தலைவர்கள்!**

தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் அன்போடு வரவேற்கிறேன். கழகத்தின் ஒன்றிய, நகர, பகுதி , பேரூர், வட்டம், கிளைக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இங்கு வருகை தந்துள்ள நீதிஅரசர்கள், அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், பத்திரிக்கை மற்றும் மீடியா நண்பர்கள் என அனைவரையும் வருக, வருக என வரவேற்று மகிழ்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் உங்கள் அத்தனை பேரையும் நிகழ்ச்சிக்கு வருக, வருக என வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் வரவேற்றுப் பேசினார்.

---

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

குறைவு என்பதால், தாமதம் ஏற்படுவதாகச் சொன்னார்கள். அதுபோன்ற காரணங்களை மக்கள் இப்போது ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால், கூடுதலாக பணியாளர்களை அமர்த்தி, இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல மரம் வெட்டும் உபகரணங்களைக் கூடுதலாக இருப்பு வைத்திருப் பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மழை நீர் சூழ்ந்துள்ள நிலையில், குழாய் வழியாக வழக்கமாக வழங்கும் மெட்ரோ வாட்டரை வழங்க முடியாத சூழலில், டேங்கர் லாரி மூலம் தாமதமின்றி குடிநீர் வழங்குவதை அனைவரும் உறுதிசெய்ய வேண்டும்.

**மக்கள் கோரிக்கை!**

குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்திருக்கும்போது நம்மால் மின் இணைப்பு வழங்க முடியாது. அதனால், தாழ்வான பகுதிகளில் உள்ள மின் வாரியப் பெட்டிகளை இப்போதே உயர்த்தி வைப்பதற்கான நடைமுறையை மேற்கொள்ளவேண்டும். மழை நீர் சூழ்ந்துள்ள ஒட்டுமொத்தப் பகுதியும் இருளில் மூழ்கிவிடும்போது, `வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்காவிட்டாலும், ஜெனரேட்டர் மூலம் பிரதான சாலைகளிலும் இணைப்புச் சாலைகளிலும் ஃபோகஸ் லைட்களை கட்டி எரிய விடுங்கள்' என்று கடந்த மழையின்போது மக்கள் கோரிக்கை வைத்தனர். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மழை, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களின்போது மக்களிடம் பணியாற்றுவதில் நீண்ட நெடிய அனுபவம் உள்ள எங்கள் கழகத்தினரையும், மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்று தானாக முன்வந்து பணியாற்றும் தன்னார்வலர்களையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**வாட்ஸ்அப் குழுக்கள்!**

ஒவ்வொரு வார்டிலும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், இளைஞர்கள், தன்னார்வலர்களைக் கொண்ட வாட்ஸ்அப் குழுக்களை நாம் உருவாக்க வேண்டும். மீட்புப் பணி, உணவுப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது போன்ற பணிகளில் அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இயங்கும்படி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களை அறிவுறுத்த வேண்டும். சிதிலமடைந்த நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள், பழமையான சுனாமி குடியிருப்புகள் போன்ற இடங்களில் வாழும் மக்களை எச்சரிக்கை விடுத்து, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்க வேண்டும்.

மழைநீர் தேங்கும் பகுதிகள், ரிலீஃப் சென்டர்கள், மோட்டார்கள், போட் உள்பட நம்மிடம் கையிருப்பில் உள்ள உபகரணங்கள், சமையற்கூடங்கள், தன்னார்வலர்கள் குறித்த விவரங்கள் என ஒட்டுமொத்தத் தகவல்களையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில், நம் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையான இண்டகிரேட்டடு கமாண்ட் அண்ட் கண்ட்ரோல் சென்டர் (Integrated Command and Control Centre) ICCC-ஐ மேலும் பலப்படுத்துவது அவசியம்.

சமூக வலைதளங்களில் வரும் மக்களின் கோரிக்கைகள், புகார்கள், மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகள், அவற்றுக்கான தீர்வுகள் என அனைத்தும் ICCC மூலம் ஒருங்கிணைக்கும் வகையில் இந்தக் கட்டுப்பாட்டு அறை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**ஒருங்கிணைப்பு வேண்டும்!**

மழை நேரத்தில் நான் தினமும் அந்தக் கட்டுப்பாட்டு அறைக்கு வந்து, அன்றன்று நடந்தப் பணிகளை ஆய்வு செய்து மறுநாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அறிவுறுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். `மக்கள் பிரதிநிதிகளும் அரசு அலுவலர்களும் அதிகாரிகளும் நம்முடன் களத்தில் இருக்கிறார்கள்' என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டால், `அரசாங்கம் நம்முடன் நிற்கிறது. இந்த மழையை சமாளித்துவிடலாம்' என்ற நிம்மதி மக்களுக்கு வந்துவிடும். அந்தவகையில், நாம் ஒவ்வொருவரும் நம் பணிகளை அமைத்துக்கொள்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எப்போதுமே அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு வருகிறோம். அதுவும் பேரிடர் நேரங்களில் இந்த ஒருங்கிணைப்பு வழக்கத்தைவிட, அதிகமாக இருக்க வேண்டும். அனைத்து அரசுத் துறைகளும் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வுகாணும்போது அதற்கான ரிப்ளை பதில்களை உடனுக்குடன் சமூக வலைதளங்களில் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரிடர் ரிலீஃப் சென்டர், கம்யூனிட்டி கிச்சன் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். எனவே, அதற்கேற்ப ஒவ்வொருவரும் நம் பணிகளை அமைத்துக்கொள்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நம் சக அமைச்சர் பெருமக்களுடன் சேர்ந்து மூன்று ஆய்வுக் கூட்டங்களை ஏற்கனவே நடத்தியுள்ளோம்அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, இந்த ஆண்டு பருவ மழையில் இருந்து மக்களைக் காப்பாற்ற உறுதியேற்போம் எனக் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, வி.செந்தில்பாலாஜி, ஆவடி சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, எம்.கே.மோகன், அரவிந்த் ரமேஷ், மயிலை த.வேலு, ஜோசப் சாமுவேல், காரம்பாக்கம் கணபதி, ஜெ.கருணாநிதி, கே.பி.சங்கர், மருத்துவர் எழிலன், இ.பரந்தாமன், அ. வெற்றியழகன், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், பிரபாகரராஜா, ஹசன் மவுலானா,

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

### எண்ணூர் விரைவுச் சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த

## எண்ணூர் போக்குவரத்து காவலரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி !

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.7-**

**சென்னை, மணலி, எண்ணூர் விரைவுச் சாலையில் நிகழ்ந்த சாலைவிபத்தில் உயிரிழந்த எண்ணூர் போக்குவரத்துக் காவலரின் குடும்பத்தி னருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

*சென்னை, எண்ணூர் காவல் நிலையத்தில், போக்குவரத்துப் பிரிவில் காவலராகப் பணியாற்றிவந்த திரு. லக்ஷ்மணன் (வயது 37) என்பவர் நேற்று (05.10.2024) காலை சுமார் 6.00 மணியளவில் அம்பத்தூரில் நடைபெறவிருந்த காவல் துறை பயிற்சி அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காக சென்னை, மணலி, எண்ணூர் விரைவுச் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்று கொண்டிருந்த கிரேன் மீது மோதிய விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு உடனடியாக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், இன்று காலை 8.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.*

*போக்குவரத்துக் காவலர் திரு.லக்ஷ்மணன் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.*

*திரு.லக்ஷ்மணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

---

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 144வது வட்டச் செயலாளரும் - சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினருமான ஏ.ஸ்டாலின் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 05.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.